பகுதியிலும் 50,000-க்கும் மேற்பட்டோர் பதிவு செய்திருந்தால்தான் அங்கு மருத்துவமனை தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

சொந்தக் கட்டடம்

***1454 திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரத்திலுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இதயமே ரோஜாவானால் எண்ணம் அனைத்தும் நறுமணம் ஆகும்" என்ற வரிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி, எங்கள் அம்மா அவர்களுக்கு மட்டுமே பொருந்தும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி, எனது பதிலைத் தெரிவிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒட்டன்சத்திரம் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு விருப்பாட்சி கிராமம் புல எண் 136/1-ல் உள்ள 1.32 ஹெக்டேர் நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தினை போக்குவரத்துத் துறைக்கு நில மாற்றம் செய்யுமாறு மாவட்ட

நிருவாகத்திடம் கோரப்பட்டுள்ளது. நில மாற்றம் பெறப்பட்டவுடன் போதிய நிதி வசதி பெறப்பட்டு, ஒட்டன்சத்திரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008 ஆம் ஆண்டு எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் ஒட்டன்சத்திரம் மோட்டார் வாகனப் பிரிவு அலுவலகம் தொடங்கப்பட்டது. அன்றைக்கு போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த திரு. கே.என். நேரு அவர்கள் டிசம்பர் மாதம் அதைத் திறந்து வைத்தார்கள். அன்று முதல் இன்று வரை வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. அமைச்சர் அவர்கள் விருப்பாட்சி அருகே 1.32 ஹெக்டேர் நிலத்தை மாவட்ட நிருவாகத்திடம் கோரி, போக்குவரத்துத் துறைக்கு நிலம் மாற்றம் செய்யப்பட்டு, பணி ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, நில மாற்றம் செய்கின்ற பணியை விரைந்து முடிக்கக் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கட்டடத்திற்கு எவ்வளவு நிதி தேவைப்படுகிறது என்பதை அறிவதுடன், இந்த ஆண்டே நில மாற்றம் செய்யப்பட்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தை உடனடியாகக் கட்டுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில மாற்றப் பணி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. அங்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்பட்சத்தில், அதற்கான நிதியினைப் பெற்று, விரைவிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் போக்குவரத்துப் பணிமனை பல ஆண்டுக் காலமாக வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. அங்கே இருக்கின்ற பேருந்துகளை இரவு நேரங்களிலே நிறுத்துகின்ற சமயத்திலே அந்தப் பணிமனையிலே இடம் போதாத காரணத்தினால் சாலை ஓரங்களில் நிறுத்துகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணிமனைக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு முன் வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் அதிகமான பணிமனைகளை, வாடகைக் கட்டடங்களில் இருந்த பணிமனைகளையெல்லாம் சொந்தக் கட்டடங்களில் மாற்றுவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பரிசீலனை செய்து, அதற்கான நிலம் தேர்வு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்.*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, சிங்கம்புணரியில் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கான பணிமனை துவங்கப்படும் என்று கடந்த 2006-2011 தி.மு.க. ஆட்சிக் காலத்தில், அன்றைக்கு போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த திரு. கே.என். நேரு அவர்கள் அறிவிப்புச் செய்தார்கள். தொடர்ந்து அதற்கான முயற்சிகள் நடைபெற்ற நேரத்தில், ஆட்சி*

மாற்றம் ஏற்பட்டது. கடந்த 2011-2016 இந்த ஆட்சிக் காலத்தில், அப்பொழுது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் இதே அவையில் அந்தப் பணிமனை நிறுவுவதற்கான கேள்வியை நான் கேட்டிருந்தேன். அவரும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, விரைவில் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். 5 ஆண்டு காலத்திற்குப் பிறகு இப்பொழுதும் அது நினைவூட்டக்கூடிய நிலையிலே இருக்கிறது. ஏனென்றால் சிங்கம்புணரி, அருகிலே இருக்கக் கூடிய மதுரை மாவட்டம், சிவகங்கை மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம், திருச்சி மாவட்டம் ஆகிய 4 மாவட்டங்களை இணைக்கக்கூடிய ஒரு மையப் பகுதியாக இருக்கின்றது. பல குக்கிராமங்களும், கிராமங்களும் நிறைந்த அந்த சிங்கம்புணரி பகுதியில் பேருந்துப் பணிமனை அமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கம்புணரி பகுதியிலே வாகனங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, அரசினுடைய நிதி நிலையையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, அங்கு பணிமனை அமைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஒப்பற்றத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களையும், தமிழினத்தினுடைய இளம் தலைவர் எங்களுடைய அன்புத் தளபதி அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் பேரூராட்சியில் கடந்த 2011 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியிலே நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, மாநகரப் பேருந்துப் பணிமனைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 5 ஆண்டுகளுக்குப் பிறகு, 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அ.தி.மு.க. ஆட்சியில் அவசர அவசரமாக சுற்றுச் சுவர், தரைத் தளம் இல்லாமல், மேற்கூரை மட்டும் அமைத்து, பணிமனை திறந்து வைக்கப்பட்டது. இப்பேருந்துப் பணிமனைக்கு தரைத் தளம், சுற்றுச் சுவர் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவசர அவசரமாகப் பேருந்துப் பணிமனை திறந்து வைக்கப்பட்டது என்று சொன்னார்கள். பணிமனை என்பது, பணிகள் முடிவடைந்துதான் திறக்கப்படும். சுற்றுச் சுவர் அமைப்பது என்பது நிதி வசதியைக் கருத்தில் கொண்டு அந்தப் பணியை முடித்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய அந்தக் கோரிக்கைகளை நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, செய்து கொடுப்பதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அந்தப் பணிகள் முடித்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

அன்னதானத் திட்டம்

***1211—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—